1990 சனவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தியின்போது மேற்கொள்ளப்படுகிற பழைய முறையின் காரணமாக தரக் குறைவும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் சொன்னது போல் சில ஆபத்தான விளைவுகளும் ஏற்படக் கூடும் என்பதற்காக, விஞ்ஞான முறையிலே இந்த உற்பத்தியைச் செய்தால் தரம் உயரவும், உற்பத்தி பெருகவும் வழியுண்டு. அவர்கள் சொன்ன அந்த ஆபத்துக்கள் நீக்கப்படுவதற்கும் வழியுண்டு. அவற்றை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசை ஆதரித்துக் கொண்டிருக்கிற முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் சமீபத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உப்புக்கு வரி போட்டால் வேறு எந்த வரியும் போட வேண்டியதில்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் சொன்னதால் எங்கே உப்புக்கு வரி போட்டுவிடுவாரோ என்று ஏழைகளெல்லாம் பயந்து கொண்டிருக்கிறார்கள். எனவே உப்புக்கு வரி வராது என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு உப்புக்கு வரி விதிக்காது என்று நான் ஒப்புக்குச் சொல்லவில்லை ; உண்மையாகவே சொல்கிறேன் (சிரிப்பு).

ஒட்டன்சத்திரத்தை வட்டமாக்குதல்.

*1527. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தை வட்டமாக்கும் (Taluk) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டுக்குள் பழனி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒட்டன்சத்திரத்தை வட்டமாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல வேளை, இன்றைக்காவது சப்ளிமெண்டரி கேள்வி போடுகிற வழக்கத்தை உறுப்பினர்கள் பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். திண்டுக்கல், பழனி வட்டங்களைச் சீரமைத்து ஒட்டன் சத்திரத்தை வட்டமாக்கும் கருத்துரு 1986-87 ஆம் ஆண்டு முதல் பலமுறை பரிசீலனை செய்யப்பட்டும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம் 15—9—1985 முதல் ஏற்படுத்தப்பட்டமையாலும் பழனி மற்றும் கொடைக்கானல் ஆகிய வருவாய்க் கோட்டங்கள் 15—9—1985 முதல் அமைக்கப் பட்டதாலும் மேலும் நிலக்கோட்டை வட்டம் பிரித்து அமைக்கப்பட்டு வாடிப்பட்டி வட்டமும் 15—9—1985 முதல் ஏற்படுத்தப்பட்டமையாலும் 1986-87 ஆம் ஆண்டு ஒட்டன்சத்திரம் வட்டம் அமைக்கத் தேவையில்லை என அரசு கருதியது.

மேலும், 1987-88 ஆம் ஆண்டுக்காக இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் இச்செயற்குறிப்பினை செயல்படுத்த இயலவில்லை. இம்மாநிலத்திலுள்ள சில பெரிய வட்டங்களைப் பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஒன்று ஆய்வு செய்யப்பட்டு முன்னுரிமைப் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட்டது. அம்முன்னுரிமைப் பட்டியலின்படி 11 வட்டங்களைப் பிரித்து 8 புதிய வட்டங்களை அரசின் பொருள் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு ஆண்டொன்றுக்கு ஒரு புதிய வட்டம் அமைக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. முன்னுரிமைப் பட்டியலில் முதல் இனமாக இருந்தது திண்டுக்கல்--காயிதேமில்லத் மாவட்டத்தில் உள்ள திண்டுக்கல் மற்றும் பழனி வட்டங்களைப் பிரித்து புதிய ஒட்டன் சத்திரம் அமைக்கும் கருத்துருவாகும்.

1988-89 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயற்படுத்த அரசு முயன்றது. புதிய கோவை வடக்கு வட்டம் ஏற்படுத்தப்பட்டு 15—12—1987 முதல் செயல்பட்டு வருவதாலும், புதிய ஆண்டிப்பட்டி வட்டம் 1—1—1988 இல் அமைக்கப்பட்டதாலும் அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டும், 1988-89ஆம் நிதியாண்டில் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் அனுப்பப் பட்ட எந்தச் செயற்குறிப்பையும் அரசு ஏற்க இயலாது என முடிவெடுத்தமையால் இத்திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை. எனவே, புதிய ஒட்டன்சத்திரம் அமைக்கும் கருத்துருவை 1989-90 ஆம் ஆண்டில் எடுப்பது பற்றி ஆய்வு செய்ய..

திரு. மா. சுந்தரதாஸ் : Point of order, Sir. இது கேள்விக்குப் பதிலா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதிலளிக்கும்போது நீங்கள் குறுக்கிடக்கூடாது ; உட்காருங்கள்.

1990 சனவரி 20]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : விஷயங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். விஷயங்களைச் சொல்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேன் (சிரிப்பு). புதிய ஒட்டன்சத்திரம் அமைக்கும் கருத்துருவை 1989-90ஆம் ஆண்டில் எடுப்பது பற்றி ஆய்வு செய்ய அரசு கருதியுள்ளது. இருப்பினும், நடப்பு நிதியாண்டில் பகுதித் திட்டத்தின் கீழ் இப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வருவாய் நிர் வாக ஆணையரின் செயற்குறிப்பினைப் பெற்று அரசு ஆய்வு செய்ய முன்வரும். வேறு ஏதாவது இருக்கிறதா ? (சிரிப்பு).

9-25 மணி

திரு. பி. காளியப்பன் ; துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு ; துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முன்னுரிமைப் பட்டியல் பற்றி தெரிவித் தார்கள். திருப்பத்தூர், சிங்கம்புணரி இரண்டு தாலுக்காக்கள் பிரிக்கப்படும் என்று ஏற்கனவே செயற்குறிப்பு இருக்கிறது. மாவட்ட ஆட்சியாளருக்கு எந்தெந்த பகுதி எந்தெந்த தாலுக் காவில் சேர்க்கப்பட வேண்டுமென்று கோரிக்கைகள் விடுக்கப் பட்டு, அந்தக் கோரிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, அரசிற்கு அனுப்பப்பட்டு விட்டன. அவை மிக விரைவில் பிரிக்கப்படுகிற தாலுக்காக்களாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் இந்த கேள்வி மூலக்கேள்வியோடு ஒத்து வரவில்லை. தனியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கேட்பார்களானால் அதற்குரிய விடை அளிக்கப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. என். பழனிவேல் ; துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரத்தை பழனி தாலுக்காவிலிருந்து பிரித்து தனி தாலுக்காவாக ஆக்கித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. இன்றைக்கு பழனி வட்டம் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக் கிறது. நூறு கிலோமீட்டர் விஸ்தீரணத்தில் அந்த தாலுக்கா இருக்கிறது. இதனால் வருவாய்த் துறை அதிகாரிகளின் வேலை பளு அதிகரித்து இருப்பதால் துரிதமாக அலுவல்கள் நடை பெறுவதில்லை. சமீபத்தில் தமிழக அரசு பல்லடத்தை தனித் தாலுக்காவாக ஆக்கியிருக்கிறது. அதைப்போல ஒட்டன் சத்திரத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசு இந்த ஆண்டிலாவது அதாவது 1990-91ல் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, Ottanchathiram problem is over.

திரு. ப. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் தனியாக பிரிக்கப்படும் போது சில வட்டங்கள் நெடுந்தொலைவில் அமைந்துவிட்டன. பழனி கோட்டம் வேடசந்தூர் ரோடு இணைக்கப்பட்டு 80 கி.மீ. தொலைவு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அருகில் திண்டுக்கல் 12 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. எனவே, இன்னொரு கோட்டம் நத்தம், வேடசந்தூரை இணைத்து அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தாலுக்கா ஏற்படுத்தப் பட்டபின் வட்டங்கள் பின்வருமாறு அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வட்டாரங்கள் எண்ணிக்கை திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் 3, பழனி 2, ஒட்டன்சத்திரம் 2 : குறுவட்டங்கள் திண்டுக்கல் 7, பழனி 8, ஒட்டன்சத்திரம் 6: கிராமங்கள் திண்டுக்கல் 69, பழனி 78, ஒட்டன்சத்திரம் 63, ஒட்டன்சத்திரம் வட்டம் அமைக்க தொடரினச் செலவாக—இது கேட்காத கேள்விக்கு நானே பதில் சொல்கிறேன்—ரூ. 3.28 லட்சமும், தொடராயின செலவாக ரூ.41.8 லட்சமும் செலவாகும் என்று 1987 ஆம் ஆண்டு கணக்கிடப்பட்டது. அது அதிகரிக்கவும் கூடும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் ; துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, இந்தப் பெயரை மாற்றுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா ? அந்த வார்த்தை தொன்மையான வார்த்தையா அல்லது குறைவான சமூகத்தின் பெயரா என்று தெரியவில்லை. இப்படி வட்டங்களை மாற்றுவதற்கு ஏதாவது சட்டத் திட்டங்களை வைத்திருக்கிறார்களா ? அப்படி மாற்றும்போது அந்த வட்டத்திற்கு ஏதாவது பெயர் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, பெயர் மாற்றுகிற பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடையதாகும். அதிலே நான் தலையிட விரும்பவில்லை.

பேரையூரை தாலுக்கா மையமாக்குதல்.

*2070. திரு. ஆ. அதியமான் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்திலுள்ள பேரையூர் எப்போது தாலுக்கா மையமாக்கப்படும் ?